IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, VELLORE DISTRICT

PAGE NO.44 /2020
DEPOSITION OF WITNESS
(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.99/2018 PW-6 |
| Name | : | சுரேஷ் |
| Father Name | : | ரவிசங்கர் |
| Village | : | சில்வர்பேட்டை |
| Calling | : | செட்டு போடும் வேலை |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.02.2024.

( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

அ.சா. 1 தாயாளன் என் உறவினார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். காவல் நிலையத்தில் பார்த்துள்ளேன். அரக்கோணதிலிருந்து காஞ்சிபுரம் நோக்கி கல்லாறு பிரிஜ் அருகே லாரி போனாது. தமிழ்ச்செல்வி அந்த இடத்தை கடக்கும்போது லாரி மோதி அந்த இடத்திலே இறந்துவிட்டார்.காவல் நிலையத்திற்கு சென்றோம். போலிசார் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் (பார்வை மகஜர்) உள்ள முதல் கையெழுத்து என்னுடையது.அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் அந்த ஆவணத்தில் முனுசாமி என்வர் கையெழுத்து போட்டார். அதில் எழுதியுள்ள விவரம் தற்போது ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனக்கு என்ன உறவினர் என்றால் என் மனைவியின் அக்கா உறவினார். போலிசார் அழைத்து தான் காவல் நிலையம் சென்றேனா என்றால் விபத்து ஆனாது என்று காவல் நிலையம் சென்றோம். யார் சொன்னார்கள் என்று ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் எத்தனை கைெழுத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. எழுதிய தாளில் போட்டேனா எழுதாத தாளில் போட்டேனா என்றால் எழுதிய தாளில் போட்டேன். போலிசார் என்னை யார் விசாரித்தார் என்றால் SI விசாரித்தார். அ.சா.1 என் உறவினார் என்பதால் அவர் அழைத்தால் வந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் கையெழுத்துபோட்டவர் யார் என்றால் மேல்ப்பாக்கத்தை சேர்ந்த முனுசாமி. அவரும் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டார் என்றால் ஆம்.